

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.7.2024) தலைமைச் செயலகத்தில், 2023–2024 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, நாட்டின் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களான சென்னை IIT, திருச்சி NIT, Tamil Nadu National Law University, தரமணி – National Institute of Fashion Technology ஆகிய கல்வி நிறுவனங்களில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள 8 மாணவ, மாணவியர்களை பாராட்டி, வாழ்த்து தெரிவித்து மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி.க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று - நாட்டின் தலைசிறந்த

# உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற மாணவ - மாணவியர்க்கு மடிக் கணினிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (19.7.2024) தலைமைச் செயலகத்தில், 2023-2024 ஆம் கல்வி யாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, நாட்டின் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள 8 மாணவ, மாணவியர்களை பாராட்டி, வாழ்த்து தெரிவித்து மடிக் கணினிகளை வழங்கி னார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூகபொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்பு களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி மாணவ, மாணவியர்கள் நாட்டின் முன்னணி கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலும் வகையில் “நான் முதல்வன்” திட்டத்தின்கீழ் JEE / CLAT போன்ற பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்றிடும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, JEE / CLAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்று, சென்னை, IITல் பயில தேர்ச்சி பெற்றுள்ள விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவர் சி. பார்த்தசாரதி, திருச்சி NITல் பயில தேர்ச்சி பெற்றுள்ள சேலம் மாவட்டம், கரியகோவில்வலவு, அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி எல். சுகன்யா, திருச்சிராப் பள்ளி மாவட்டம், சின்ன இலுப்பூர், அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி எம். ரோகிணி, Tamil Nadu National Law Universityல் பயில தேர்ச்சி பெற்றுள்ள நீலகிரி மாவட்டம், மு. பாலாடா, ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளி மாணவர் ஏ.அஜய், தரமணி - National Institute of Fashion Technology பயில தேர்ச்சி பெற்றுள்ள திருவண்ணாமலை மாவட்டம், புளியம்பட்டி, ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளி மாணவியர் கே. மீனா மற்றும் எஸ்.துர்கா, கள்ளக்குறிச்சி மாவட்டம், மணியார்பாளையம், அரசு உண்டு உறைவிட மேல் நிலைப் பள்ளி மாணவி இ.பழனியம்மாள் மற்றும் மாணவர் கே.தவமணி, ஆகிய 8 மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக முதலமைச்சர் அவர்கள் அம்மாணவ, மாணவியர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்து, மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி.க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணா துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆக.8ல் திறந்து வைக்கிறார்!

# முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி சிலை - மணி மண்டபம்!

## அமைச்சர் க.பொன்முடி தகவல்!



விழுப்புரம், ஜூலை 21-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் சிலையை விழுப்புரத்தில் ஆகஸ்ட் 8ஆம் தேதி திறந்து வைக்க உள்ளதாக, அமைச்சர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் எ. கோவிந்தசாமிக்கு திருவுருவ சிலை மற்றும் மணி மண்டபமும், இதே போன்று, இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிர் நீத்த 21 போராளிகளுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என, சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதன் அடிப்படையில் ஏ.கோவிந்தசாமி மணி மண்டபத்திற்கு நான்கு கோடி ரூபாயும், இட ஒதுக்கீட்டு போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு 5 கோடியே 70 லட்சம் ரூபாய் என மொத்தம் ஒன்பது கோடியே 70 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது இந்த இரு மணிமண்டபம் கட்டடம் முடியும் நிலையில் உள்ளது.

இந்நிலையில், இந்த பணிகளை உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி நேரில் ஆய்வு செய்தார். விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, சட்ட மன்ற உறுப்பினர்கள் லட்சுமணன், அன்னியூர் சிவா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் தேர்வுக்கு பா.ஜ.க. ஆதரவு தெரிவிக்கும் நிலையில், அந்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ம.க. நீட்டுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது விந்தையாக உள்ளதாக தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி சிலை மற்றும் மணிமண்டபத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 8ஆம் தேதி திறந்து வைக்க உள்ளதாக கூறினார்.



தஞ்சாவூர் மாவட்டம் அரண்மனை வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் புத்தகத் திருவிழா அரங்கினை 19.07.2024 அன்று திறந்து வைத்தார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.07.2024) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான நெதர்லாந்து நாட்டுத் தூதர் திருமதி மாரி லுயிசா ஜெரார்ட்ஸ் (Tmt. Marie Louisa Gerards) அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாட்டிலுள்ள நெதர்லாந்து நாட்டு கௌரவத் தூதர் கோபால் சீனிவாசன், பெங்களூர் – நெதர்லாந்து நாட்டு துணைத் தூதர் திருமதி ஆனி கிரெமெர்ஸ் (Tmt. Anne Cremers), டிவிஎஸ் கேபிட்டல் வர்த்தக விவகார துணைத் தலைவர் டி.ஏ. பிரசன்னா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.07.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பொன் முருகேசன், நிர்வாகிகள் ஐயப்பன், சங்கர், சிவகுமார் சந்தித்து, சுதந்திர போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 9 ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டு தோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளார்.

ஈரோடு மாவட்டக் கழக முன்னோடி - முன்னாள் எம்.பி.

# கோபி வி.பி.சண்முகசுந்தரம் மறைவு!

## கழகத்தினர் - பொதுமக்கள் அஞ்சலி!



ஈரோடு, ஜூலை 21-

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.பி.சண்முகசுந்தரம்,(வயது 76) நேற்று (20.7.2024 - சனிக்கிழமை) அதிகாலை 12.58 மணிக்கு கோவை தனியார் மருத்துவமனையில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இவருக்கு கனகாம்பாள் என்கிற மனைவியும், கனிமொழி, மதுமதி என்கிற இரண்டு மகள்களும் உள்ளனர். முதல் மகள் கனிமொழியின் கணவர் அன்பழகன் ஐ.ஏ.எஸ். மும்பை மாநிலத்தில் அரசு திட்டக் குழு இயக்குநராக பணியாற்றி வருகிறார். இரண்டாவது மகள் மதுமதியின் கணவர் நரேந்திரன் சாஃப்ட் வேர் இன்ஜினியராக பணியாற்றி வருகிறார்.

மறைந்த வி.பி. சண்முகசுந்தரம் கோபி அருகேயுள்ள வெள்ளாங்கோவில் கிராமத்தில் 29.6.1944ம் ஆண்டு பொன்னப்பன் - குட்டியம்மாள் தம்பதியர் மகனாக பிறந்தார். இவர் சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

### மிசா காலத்தில் கலைஞர் தலைமையில் மணவிழா!

இவர் ஆரம்ப காலம் முதலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகத்தின் தீவிர தொண்டனாக கழக பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

மிசா நெருக்கடி காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1976ம் ஆண்டு இவரின் திருமணத்தை வெள்ளாங்கோயிலில் நடத்தி வைத்தார். திருமணத்தின் போது மின்சாரம் துண்டிக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைமைக் மூலம் உரையாற்றி மணமக்களை வாழ்த்தினார்.

### ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்!

இவர் கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1991 மற்றும் 2001 ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கோபி சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டார். மீண்டும் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோபி நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் திறம்பட பணியாற்றினார். கழகத்திற்கு கடுமையான சோதனைகள் ஏற்பட்ட போது ஈரோடு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஈரோடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்தார்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு நேற்று (20.7.2024-சனிக்கிழமை) மாலை கோபி கரட்டடிபாளையத்தில் உள்ள ரோட்டரி கிளப்மின் மயானத்தில் நடைபெற்றது.



தி.மு.க. இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு கோவை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கணபதி ராஜ்குமார் எம்.பி., கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் பகுதி1, சிங்காநல்லூர் பகுதி2 பகுதிகளுக்கு உட்பட்ட வார்டு எண்கள் 55,56,57,58,54 ஆகிய பகுதிகளில் வாக்காளப்பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார். கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் மயூரா எஸ்.ஜெயக்குமார், பகுதிக்கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சாமி, சிங்கை மு.சிவா, கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் மணிசுந்தர், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கிருஷ்ண மூர்த்தி எம்.சி., வெங்கிடு,ம.தி.மு.க. அன்பு தர்மராஜ் எம்.சி., விஜயகுமார், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அருணகிரி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் ஆறுமுகம், தெய்வேந்திரன் கொ.ம.தே.க.மாவட்டச் செயலாளர் தனபால், ஆட்டோ குமார், வி.சி.க. கண்ணன், கார்த்தி, மனிதநேய மக்கள் கட்சி சத்தார், வட்டக் கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், சுரேஷ் குமார், எல்.பி.எப். சண்முகம், தி.இளங்கோவன், கே.ஆனந்தகுமார், சாந்தா மணி பன்னீர்செல்வம் எம்.சி.,பகுதி துணைச் செயலாளர்கள் கஸ்தூரி அருண், ராஜேந்திரன், கீதா செல்வராஜ், சிங்கை சௌந்தர், அவைத்தலைவர் என்.டி.சின்னசாமி, மருதாசலம், சி.எம்.வேலுமணி சுற்றுச்சூழல் அணி ஜவகர்,மருத்துவ அணி டாக்டர்.பிரதீப் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.